1986 மே 13]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்பு அப்படி அதிகமான அளவுக்கு இருந்து இருக்கலாம். இப்போது அப்படி இல்லை. அப்படி இருந்திருந்தால் என்னுடைய கவனத்திற்கு தாராளமாக கொண்டு வந்து இருப்பார்கள். நாங்களும் அதற்கான நடவடிக்கை எடுக்க முன் வந்து இருக்கிறோம். சில நேரங்களில் தேவையானால் அப்படிப்பட்ட பள்ளிகளை அரசே எடுத்து நிர்வகிக்கக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. அதை விட சம்பளத்தை நேரடியாக தருகின்ற முறையை நாம் பல பள்ளிகளில் கொண்டு வந்து இருக்கிறோம். ஆகவே சம்பளத்தை குறைத்துத் தருகிறார்கள் என்ற அந்த புகாருக்கு இப்போது அதிக ஆதாரம் இல்லை என்று கருதுகிறேன். குறிப்பிட்ட பள்ளிகளில் அப்படி இருக்குமானால் என்னுடைய கவனத்திற்கு கொண்டு வந்தால் அதன்மீது தக்க நடவடிக்கையை நாம் எடுக்கலாம். மூன்பு ஆசிரியர்கள் சங்கம் அவ்வளவு பலமாக இல்லாமல் இருந்த காலத்தில் இப்படி நடந்து இருக்கலாம். இப்போது ஆசிரியர்கள் சங்கம் பலம் அடைந்துள்ள இந்தக் காலத்தில் அப்படி ஒரு நிர்வாகம் இருக்குமானால் ஆசிரியர்கள் சங்கம் நிச்சயமாக அதை விட மாட்டார்கள். அரசாங்கம் அவர்களுக்கு துணையாக இருக்கின்ற காரணத்தால் அந்தப் பிரச்சினைக்கு இடம் இல்லாமல் செய்து விடலாம். அவ்வளவு தைரியமாக இவற்றை எல்லாம் எதிர்த்து தவறு செய்கின்ற அளவுக்கு எந்த நிர்வாகமும் இருக்கும் என்று நான் கருதவில்லை. அப்படி குறிப்பிட்ட பள்ளி இருக்குமானால் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தக்க நடவடிக்கையை அரசு எடுக்கும்.

764—(* வினா எண். 3835—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மைனாரிட்டி பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு பல ஆண்டுகளாக ஊதியம் வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், 7 அல்லது 8 ஆண்டுகளாக பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்க உடனடி நடவடிக்கை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மைனாரிட்டி பள்ளிகளில் அரசினரால் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் பணிபுரியும் ஆசிரியர்கட்கு ஊதியம் வழங்கப்படவில்லை என்ற புகார் எதுவும் பெறப்படவில்லை. முறையான பணியிடங்களில் பணிபுரியும் அனைத்து ஆசிரியர்கட்கும் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

[1986 மே 13

(ஆ) அரசினரால் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுள் ஊதியம் வழங்கப்படாதோர் யாரும் இல்லை என்பதால் பிற நடவடிக்கைக்கு அவசியமில்லை.

(முற்பகல் 9-20)

திரு. மா சுந்தரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, மைனாரிட்டி பள்ளிகளுக்கு ரெகக்னைஷன் கொடுக்கிறார்கள். ஆனால் ஆசிரியர்களுக்கு அங்கீகாரம் கொடுப்பதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? பல பள்ளிகள் ஆறு ஏழு வருடங்கள் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு அப்ரூவல் சேங்ஷன் கொடுப்பதில்லை. இதனால் நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் போஸ்ட் சேங்க்ஷன் இல்லாமல் அப்ரூவல் கொடுக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படிப்பட்டவர்களுக்கு உடனடியாக போஸ்ட்க்கு சேங்க்ஷன் கொடுத்து அங்கீகாரம் அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மைனாரிட்டி வகுப்பைச் சேர்ந்தவர்கள் அரசினுடைய அனுமதியைப் பெறாமலேயே தங்களுடைய இஷ்டத்திற்கு பள்ளிகளை ஆரம்பித்துவிட்டு அரசாங்கத்தினிடத்தில் பணத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்தின்மீது ஒரு அதிகாரத்தைச் செலுத்துகின்ற முறையில் தங்களுக்கு உள்ள உரிமையைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதை அரசு கவனித்துக் கொண்டு இருக்கிறது. அதற்குரிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டியிருக்கிறது. தங்கள் இஷ்டம் போல பள்ளிகளை ஆரம்பித்துவிட்டு, இஷ்டம் போல ஆசிரியர்களை அமர்த்திவிட்டு சம்பளத்தை நாம் தர வேண்டுமென்று கட்டாயப்படுத்துவது நியாயமானதும் அல்ல முறையானதும் அல்ல. தங்கள் இஷ்டப்படி நடத்த வேண்டுமென்றால் அரசினுடைய உதவியை எதிர்பார்க்கக்கூடாது. எதிர்பார்க்காமல் நடத்துவதுதான் சிறந்தது; எதிர்பார்த்து நடத்துவது சரியல்ல. ஆனால் எங்களால் அனுமதிக்கப்பட்டு அனுமதிதரப்பட்டு இருந்தால், அந்தப் பணிக்குரிய சம்பளத்தைத் அரசு தரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, மைனாரிட்டி வகுப்பைச் சேர்ந்தவர்கள் தங்களுக்குள்ள ஃபண்டமெண்டல் ரைட்டின் காரணமாகத்தான் பள்ளிகளைத் தொடங்குகிறார்கள். கேரளாவில் கூட அப்படி ஆரம்பிக்க அனுமதி

1986 மே 13]

கொடுத்து சம்பளம் கொடுக்கிறார்கள். இங்கே அவர்களை தொடங்குகிறார்கள் என்று அமைச்சரவர்கள் சொன்னது உண்மை. ஆனால் அவர்கள் மனுச் செய்கின்றபொழுது சி.இ.ஓ., டி.இ.ஓ. போன்ற அதிகாரிகளெல்லாம் வந்து பார்க்கின்ற பொழுது அங்கே மாணவர்கள் இருக்கிறார்கள் என்று ரெகக்னைஸ் செய்கிறார்கள். ஆனால் பிறகு ஆசிரியர்களுக்கு போஸ்ட் சேங்க்ஷன் செய்ய வேண்டுமென்று கேட்கின்ற நேரத்தில்தான் சிக்கல் வருகிறது. ஐந்தாறு ஆண்டுகள் மாணவர்கள் படித்து எஸ்.எஸ்.எல்.சி., ஹையர் செகண்டரி போன்ற பரீட்சைகளை எழுதுகிறார்கள். எனவே, அப்படிப்பட்ட பள்ளிகள் பற்றி ஒரு கமிஷனை நியமித்து எத்தனை ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்று கண்காணித்து அவர்களுக்குச் சம்பளம் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எல்லா ஆசிரியர்களுக்கும் பணம் தரும் அளவிற்கு நிதிநிலை இல்லை. அரசு பரிசீலிக்கவேண்டிய ஒன்று என்னவென்றால், இனிமேல் தனியார் யார் ஆரம்பித்தாலும் யாருக்குமே நிதி உதவி செய்ய முடியாது என்ற முடிவைத்தான் அரசு எடுக்க வேண்டுமே தவிர, நிதியுதவி செய்யக்கூடிய நிலைமையில் இன்று இல்லை.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் ஒதுக்கீட்டு முறை சரியாகப் பின்பற்றப்படுவதில்லை. குறிப்பாக தாழ்த்தப்பட்டவர்களை வேலைக்கு அமர்த்த வேண்டுமென்று சொல்கின்றபொழுது, தற்காலிகமாக வேறு யாரையாவது லீவில் போகச் சொல்லி விட்டு அந்த இடங்களில் இவர்களை ஒரு இரண்டு மாத காலம் என்ற அளவிற்கு தாழ்த்தப்பட்டவர்களை அமர்த்தி, ஸ்டேட்மெண்ட் கொடுக்கின்ற அந்த நேரத்தில் தாழ்த்தப்பட்டவர்களுடைய வேலை செய்கிறார்கள் என்று சொல்வதற்காக நியமிக்கப்படுகிறார்களே தவிர, நிரந்தரமான முறையில் தாழ்த்தப்பட்டவர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு அவர்கள் முன்வருவதில்லை. எனவே, அரசாங்கம் பரிசீலனை செய்து ஒதுக்கீட்டு முறை முறையாகப் பின்பற்றப்படுவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட குறை அல்லது குற்றங்கள் நிகழ்ந்து அது மெஜாரிட்டி வகுப்பினருடையதாக இருந்தால் அரசு நடவடிக்கை எடுக்க முடிகிறது. மைனாரிட்டி வகுப்பினருடையது என்றால் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. மைனாரிட்டி வகுப்பைச் சேர்ந்தவர்கள் இஷ்டத்திற்கு ஆசிரியர்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இது சமுதாயத்தில் உள்ள சங்கடமான நிலைமையின் காரணமாகத்தான் என்பதை அரசு உணர்கிறது. அவர்களுக்குள்ள அடிப்படை உரிமையின் காரணமாகத் தவறு செய்வார்கள். அரசின் ஆலோசனையை ஏற்றுக்கொள்வதில்லை.

திரு. சா. ஜெயச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மைனாரிட்டி வகுப்பினர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை நடத்துவதற்கும் பள்ளிக்கூடங்கள் தொடங்குவதற்கும் அரசாங்கப் அனுமதி அளிப்பதாகத் தெரிவித்தார்கள். சில மைனாரிட்டி வகுப்பினர் தாங்களாகவே பள்ளிக்கூடங்களை ஆரம்பித்துக் கொள்வதாகக் குறிப்பிட்டார்கள். கிருஸ்தவர்கள், முஸ்லிம்கள் என்ற இந்த இரண்டு சமுதாயத்தைச் சேராதவர்களும் மைனாரிட்டி ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கூடங்களை வைத்திருக்கிறார்கள். இதை அரசு அறியுமா? அப்படி முஸ்லீம்கள், கிருஸ்தவர்கள் அல்லாதவர்கள் மைனாரிட்டிப் பள்ளிக்கூடங்கள் வைப்பதற்கு அரசாங்கம் அனுமதி வழங்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, நாம் இப்பொழுது யாருக்கும் அனுமதி தரவில்லை. அது வழக்கு மன்றத்திற்குப் போய் அரசாங்கம் அந்த வழக்கில் வெற்றி பெற்றிருக்கிறது. ஆனால் சில பேர்கள், மெஜாரிட்டி வகுப்பைச் சேர்ந்தவர்கள்கூட மைனாரிட்டி நிறுவனம் என்று அவர்கள் சொல்வதற்குக் காரணம் அதிலே நிர்வாகியாக இருக்கிறவர்கள் கிருஸ்த்தவராகவோ அல்லது முஸ்லீம்களாகவோ இருப்பார்கள். அதை வைத்துக் கொண்டு சொல்கிறார்கள். ஆனால் சட்டத்தில் அப்படிப்பட்ட ஒரு இடம் இருக்கிற காரணத்தினால் அதைப் பயன்படுத்தி சொல்லி வருகிறார்கள். ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் தேவையில்லாத நிலைமையில் இப்படிப்பட்ட நிறுவனங்களை ஆரம்பிக்க வேண்டாம் என்றுதான் நாம் கேட்டுக்கொள்கிறோம்.

திரு. வே. இரா. ஜெயராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, சிலயிடங்களில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் தனியாரால் நடத்தப்பட்டுகின்றன. அவர்கள் மைனாரிட்டி வகுப்பைச் சார்ந்தவர்கள் என்று காரணம் காட்டி பலயிடங்களில் அரசாங்க அனுமதி பெறாமலேயே வைத்து நடத்தி வருகிறார்கள். ஆந்திரா மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி நடத்துகிறார்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்குதொடுத்து அவர்களுக்கு அதற்கு அனுமதி கொடுப்பதற்கு உச்ச நீதிமன்றம் மறுத்திருக்கிறது. அரசாங்க அனுமதி பெற்றுத்தான் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் நடத்த வேண்டும் என்று ஒரு ஆணையை வழங்கி இருக்கிறது. ஆகவே தமிழக அரசாங்கம் அந்த ஆணையை பின்பற்றி அரசாங்க அனுமதி பெறாமல் தனியாரால் நடத்தப்படுகிற அனைத்து ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளையும் மூடுவதற்கு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மூடுவது, வைத்திருப்பது அவர்கள் உரிமை, நாம் அனுமதி தருவதில்லை. அனுமதி தருவதில்லை என்பதை அவர்களுக்குச் சொல்லியிருக்கிறோம்.